


கழக முப்பெரும் விழாவையொட்டி அண்ணா அறிவாலய முகப்பில் உள்ள பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவச் சிலைகள் உட்பட அண்ணா அறிவாலயம் வண்ண விளக்குகளால் ஜொலிக்கும் காட்சி!




கழக முப்பெரும் விழா – பவள விழாவையொட்டி இராயபுரம் அறிவகம் வண்ணத் தோரண ஒளியில் மிளிரும் காட்சி!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.9.2024) சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் சு.திருநாவுக்கரசர் மகன் எஸ்.ஆர்.டி. சாய் விஷ்ணு மேகா ஆகாஷ் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



புதுதில்லியில் கழகப் பொருளாளரும் மக்களவை கழகக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின். மக்களவை கழகக் குழு துணைத் தலைவர் தயாநிதி மாறன் ஆகியோர் நேற்று முன்தினம் (14.09.2024) மறைந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி அவர்களின் திருவுடலுக்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, சீதாராம் யெச்சூரி அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களுக்கும் தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொண்டனர்.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, 13.09.2024 அன்று திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.62 பகுதியில் ரூபாய் 58.40 இலட்சம் மதிப்பீட்டில் நடைபாதை வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட குட்டக்கரை குளத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் வே.சரவணன்., நகர பொறியாளர் சிவபாதம், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள்,மாநகராட்சி அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



திருச்சியில் பேரறிஞர் அண்ணாவின் 116வது பிறந்த விழாவை முன்னிட்டு சத்திரம் பேருந்து நிலையம் அருகே உள்ள அவரது திருவுருவ சிலைக்கு கழக முதன்மை செயலாளரும் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு வழிகாட்டுதலின் படி, மத்திய மாவட்ட திமுக செயலாளர் வைரமணி தலைமையில் மாநகர செயலாளர் மாநகர மேயர் அன்பழகன் முன்னிலையில் திமுகவினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதனைத்தொடர்ந்து திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவ சிலைக்கு திமுகவினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்த நிகழ்வில் சேர்மன் துரைராஜ்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அன்பில் பெரியசாமி கருணாநிதி, விஜயலட்சுமி கண்ணன், செவந்தி லிங்கம்,, பாலமுருகன்இளங்கோ மோகன்தாஸ் ராம்குமார் கனகராஜ் லால்குடி நகர தலைவர் துரை, கலைச்செல்வி வழக்கறிஞர் மணிவண்ண பாரதி, மோகன் வெங்கடேசன் மதனா, சிங்காரம் கவிதா ,முகுந்தன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர் சு.திருநாவுக்கரசரின் மகன் சாய் விஷ்ணு மேகா ஆகாஷ் இணையரின் திருமண வரவேற்பு விழாவில் இளைஞர் நலன் – விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தினார். இதில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



மறைந்த சீதாராம் யெச்சூரி அவர்களின் உடலுக்கு நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி நேரில் சென்று, அஞ்சலி செலுத்தினார். “எந்த காலகட்டத்திலும், தான்கொண்ட கொள்கையில் சமரசம் செய்து கொள்ளாத மிகப்பெரிய தலைவராகத் திகழ்ந்தவர் சீதாராம் யெச்சூரி” என்றும் “அவரது மறைவு நாட்டிற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு” என்றும் பேட்டியின் போது கனிமொழி கருணாநிதி எம்.பி. கூறினார்.

# ஆந்திராவில் அரசு பஸ் – லாரி மோதல்!

*ஆந்திரா, செப். 16 - ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டம் பலமனேர் மண்டலம் மோகினி காட் என்ற பகுதியில் பெங்களூரு சென்னை தேசிய நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் மாலை திருப்பதியிலிருந்து பெங்களூரை நோக்கி பயணிகளுடன் ஆந்திர அரசு பஸ் சென்றுகொண்டிருந்தது.*

*அப்போது பெங்களூருவில் இருந்து சித்தூர் நோக்கி இரும்பு கம்பிகளை ஏற்றிக்கொண்டு லாரி வந்துகொண்டிருந்தது. மலைப்பகுதியில் நான்கு வழிச்சாலையில் சென்று கொண்டி ருந்த போது, டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த லாரி பேரிகார்டுகளை உடைத்துக்கொண்டு எதிர்திசையில் சென்று அரசு பஸ் மீது பயங்கரமாக மோதியது.*

*இதில் 8 பேர் பலியாகினர். 30 பேர் காயமடைந்தனர்.*



தருமபுரி மேற்கு மாவட்ட திமுக பொது உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் அரூர் கொங்கு திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் கழக ஆக்கப்பணிகள் குறித்து சிறப்புரை ஆற்றினார். உடன் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி,மாவட்ட அவைத்தலைவர் கே.மனோகரன்,மாநில நிர்வாகிகள் எம்.எஸ்,விஸ்வநாதன், சூடப்பட்டி சுப்பிரமணி, ராஜேந்தின், சத்தியமூர்த்தி, மாவட்ட பொருளாளர் முருகன், மாவட்ட துணை செயலாளர்கள் கிருஷ்ணகுமார், ராஜகுமாரி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இரா.சித்தார்த்தன், சென்னகிருஷ்ணன், மற்றும் ஒன்றிய, பேரூர், கழக செயலாளர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டு கழக ஆக்க பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கினர்.